# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2019

| தரம்:10 | கத்தோலிக்கத் திருமறை | நேரம்: 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண்:.............................................................................. | 14 | T | I |

**கவனிக்க.**

I. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

II. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

III. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தின் உள்ளே புள்ளடியை (X) இடுக.

### பகுதி – I

### மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. மக்களால் விரும்பப்படுகின்ற இரண்டு வரலாற்று நூல்கள்
   1. யோசுவா, நீதித்தலைவர்கள் 2. ரூத்,எஸ்தர்
   3. எஸ்ரா, நெகேமியா 4. நெகேமியா, தோபித்து

2. புதிய ஏற்பாட்டில் முதன்முதலாக எழுதப்பட்ட நற்செய்தி நூல்
   1. புனித மத்தேயு 2. புனித லூக்கா 3. புனித மாற்கு 4. புனித யோவான்

3. திருத்தூதர் பணி நூல் எழுதப்பட்ட காலப்பகுதி எது?
   1. கி.பி. 80-90 2.கி.பி. 90-100 3. கி.பி. 75-80 4. கி.பி. 70-80

4. தூய பவுல் தன் கைப்பட எழுதிய திருமுகங்கள்
   1. 1 கொரிந்தியர், 2 கொரிந்தியர் 2. 1 திமொத்தேயு, 2 திமொத்தேயு
   3. எபேசியர், கொலோசையர் 4. 2 தெசலோனிக்கர், தீத்து

5. வெளிப்பாடு என்ற கிரேக்கச் சொல் குறிக்கும் கருத்து
   1. இறுதிக்காலம் 2. இருதன்மைகள்
   3. அடையாளங்களின் பயன்பாடு 4. மறைந்துள்ள ஒன்று வெளிப்படுதல்

6. நிறக்குறியீடுகளில் வெள்ளை நிறம் குறிக்கும் பொருள்
   1. வெற்றி 2. யுத்தம், இரத்தம் சிந்துதல் 3. பஞ்சம் 4. மரணம்

7. சாலமோன் அரசனுக்கு ஆண்டவர் கனவில் தோன்றிய இடம் எது?
   1. தபோர் மலையுச்சி 2. கிபயோன் மலையுச்சி
   3. சீனாய் மலையுச்சி 4. ஒரேபு மலையுச்சி

8. ஞான இலக்கியத்தில் அடங்கும் நூல்கள் எவை?
   1. யோபு, யோசுவா    2. திருப்பாடல்கள், நீதித்தலைவர்கள்
   3. நீதிமொழிகள், சபை உரையாளர்    4. சாலமோனின் ஞானம், யூதித்து

9. ‘‘என் ஆண்டவரே என் தேவனே’’ என தன் இறைநம்பிக்கையை வெளிப்படுத்தியவர்
   1. புனித பேதுரு    2. புனிதயாக்கோபு    3. புனிதயோவான்    4. புனிததோமா

10. கத்தோலிக்கத் திருச்சபையின் முதல் மறைசாட்சி யார்?
   1. புனிதயாக்கோபு    2. புனிதஸ்தேவான்    3. புனிதபேதுரு    4.புனிதபவுல்

11. புனிதபவுலின் முதலாவது தூதுரைப் பயணத்தில் பயணத் தோழர்களாக சென்றவர்கள் யார்?
   1. புனிதபர்னபா, புனிதயோண் மாற்கு    2. புனிதலூக்கா, புனிதமத்தேயு
   3. புனிதபர்னபா, புனிதலூக்கா    4. திமொத்தேயு, புனிதலூக்கா

12. பேதுரு எனும் சொல் குறிக்கும் பொருள்
   1. கேபா    2. பாறை    3. இராயப்பர்    4. மெசியா

13. கத்தோலிக்க திருச்சபையின் பண்புகள் எத்தனை
   1. 2    2. 3    3. 4    4. 6

14. இறைவனது பத்துக் கட்டளைக்கு ஏற்ப பிரமாணிக்கமாக வாழும் போது எமக்குக் கிடைப்பது
   1. இறையாசீர்    2. பெரும் செல்வம்
   3. நோயற்ற வாழ்வு    4. புதுமை செய்யும் வரம்

15. திருவெளிப்பாட்டு இலக்கியத்தின் பண்புகளில் ஒன்றாகக் கருதப்படுவது
   1. மறையுரை    2. அடையாளங்களின் பயன்பாடு
   3. உவமைப் பிரயோகம்    4. கிரேக்க மொழிப் பயன்பாடு

16. ‘‘நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்’’ எனத் துணிவுடன் கூறிய திருத்தூதர் யார்?
   1. புனிதயோவான்    2.புனிதஅந்திரேயா
   3. புனிதபேதுரு    4.புனிதயாக்கோபு

17. இலங்கைத் திருச்சபையின் வரலாற்றினை எத்தனை காலகட்டங்களாகப் பிரிக்கலாம்?
   1. 4    2. 5    3. 6    4. 3

18. தற்போதைய திருத்தந்தை பிரான்சிஸ் யாரால் கருதினாலாக உயர்த்தப்பட்டார்?
   1. முதலாம் அருள் சின்னப்பர்    2. ஆறாம் சின்னப்பர்
   3. பத்தாம் பத்திநாதர்    4. இரண்டாம் அருள் சின்னப்பர்

19. இலங்கை கத்தோலிக்க இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
   1. புனிதயோசேவ்வாஸ் அடிகள்    2. அருட்பணி, றொட்றிக்கோ அடிகள்
   3. அருட்பணி அதிரியான்    4. அருட்பணி, யாக்கோமே கொண்சால்வேஸ்

20. பேர்த்துக்கேயரின் வருகையினால் இலங்கையில் முதன்முதலில் வரவழைக்கப்பட்ட துறவற சபை
   1. அமலமரித்தியாகிகள் சபை    2. சலேசியன் சபை
   3. இரவலர் சபை    4. பிரான்சிஸ்கன் சபை

21. எமது நம்பிக்கை அறிக்கையில் உள்ள ''ஒரே தூய பொதுவான திருத்தூது திருச்சபை'' என நாம் அறிக்கையிடும் பகுதி எது?
   1. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு திருச்சபை எண் - 8
   2. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு திருச்சபை எண் - 16
   3. கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி ஏடு – 2412
   4. கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி நூல் – 2446

22. ''எமது வாழ்நாளில் கவனியாது விட்ட எதனையும் அவரது மரண நேரத்தில் நிறைவேற்ற முடியாது'' என்ற கூற்றுக்குரியவர்
   1. யாக்கோமே அடிகளார் 2. புனித மக்மிலியன் அடிகளார்
   3. புனித யோசவ்வாஸ் அடிகளார் 4. றொட்றிக்கோ அடிகளார்

23. ''அருளடையாளங்களின் அருளடையாளம்'' என அறிமுகம் செய்யப்பட்ட அருளடையாளம்
   1. திருமுழுக்கு 2. நற்கருணை 3. உறுதிப் பூசுதல் 4. நோயில்பூசுதல்

24. தூய நற்கருணையின் சிறப்பியல்புகளில் ஒன்று
   1. பலி 2. நெருப்பு 3. நீர் 4. மென்மை

25. ''லன்சியானோ'' நகரில் நடைபெற்ற புதுமையிலிருந்து நாம் பெறும் படிப்பினை?
   1. நற்கருணையில் ஆண்டவர் உயிருடன் இருக்கிறார்.
   2. நற்கருணை வெறும் ஒரு அடையாளம் மட்டுமே
   3. நற்கருணையில் இயேசுவின் பிரசன்னம் இல்லை
   4. நற்கருணை விண்ணக முன் சுவை விருந்து

26. இயேசு திருத்தூதரின் காலடிகளைக் கழுவிய நிகழ்வைக் குறிப்பிடும் நற்செய்தியாளர்
   1. புனிதமாற்கு 2. புனிதமத்தேயு
   3. புனிதயோவான் 4. புனிதலூக்கா

27. ஞாயிறு திருப்பலி முக்கிய அம்சமாகக் கருதப்படக் காரணம் யாது?
   1. திருச்சபையின் சட்டகங்களில் உள்ளடக்கப்படுவது
   2. அன்பினதும் பணியினதும் நினைவு கூர்தல்
   3. அதுவே உயர்ந்த கல்வாரிப்பலி
   4. பாவங்களுக்கு மன்னிப்புப் பெறுவது

28. இஸ்ராயேல் மக்கள் செலுத்திய எரிபலிகளுள் ஒன்றாக அமைவது
   1. போசணைப்பலி 2. கல்வாரிப்பலி 3. குற்ற நீக்கப்பலி 4. திருப்பலி

29. இஸ்லாமிய பள்ளிவாசலுக்கு சென்ற முதலாவது திருத்தந்தை என்ற சிறப்புக்குரியவர்
   1. புனிதஇரண்டாம் அருளப்பர் சின்னப்பர் 2. புனிதஆறாம் அருளப்பர் சின்னப்பர்
   3. புனிதபத்தாம் பத்திநாதர் 4. திருத்தந்தை முதலாம் பிரான்சிஸ்

30. அன்னை திரேசா அவர்களால் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட துறவற சபை எது?
   1. திருக்குடும்பக் கன்னியர் சபை 2. கார்மேல் கன்னியர் சபை
   3. அன்பின் கன்னியர் சபை 4.திருச்சிலுவைக் கன்னியர் சபை

31. எயிட்ஸ் நோயாளிகளைப் பராமரிக்க அன்னை திரேசாவினால் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட இல்லம் எங்குள்ளது?
   1. அல்பேனியா 2. நியூயோர்க் 3. இந்தியா 4. ஸ்பெயின்

32. ‘‘மரியாயின் மாசற்ற இருதயசேனை’’ என்ற சபையை ஆரம்பித்தவர்.
   1. அருட்பணி மைக்கல் றொட்றியோ
   2. புனித மக்ஸிமிலியன் கோள்பே
   3. புனித அன்னை தெரேசா
   4. புனித இரண்டாம் அருள் சின்னப்பர்

33. புனித மக்ஸிமிலியன் அடிகளாரை புனிதராக உயர்த்திய திருத்தந்தை யார்
   1. திருத்தந்தை முதலாம் பிரான்சிஸ்
   2. திருத்தந்தை ஆறாம் அருள் சின்னப்பர்
   3. திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர்
   4. திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ற்

34. அருட்பணி மைக்கல் றொட்றிகோ அடிகளாரால் உருவாக்கப்பட்ட ஏழைகளுக்கான அமைப்பு யாது?
   1. இருதய சேனை
   2. அன்பின் கன்னியர்
   3. சுபசெத்கெதர
   4. சேவக செவன

35. அகங்காரத்தினால் இறைவனை மறுப்பது எதற்கு எதிரான பாவம்
   1. எமது ஆன்மாவிற்கு எதிரானது
   2. இறையன்பிற்கு எதிரானது
   3. தூய ஆவிக்கு எதிரானது
   4. பத்துக்கட்டளைக்கு எதிரானது

36. திருப்பலியில் செயலூக்கம் இன்றி இருத்தல் எத்தனையாம் கட்டளைக்கு எதிரான பாவம்
   1. இரண்டாம் கட்டளைக்கு
   2. நான்காம் கட்டளைக்கு
   3. ஆறாம் கட்டளைக்கு
   4. ஒன்பதாம் கட்டளைக்கு

37. திருமுழுக்கின் போது கிறிஸ்தவப் பெயர்களை பயன்படுத்துவதன் முக்கியத்துவம்
   1. நல்ல பெயரைச் சூட்டுவதற்கு
   2. கிறிஸ்தவன் என்பதை நிரூபிப்பதற்கு
   3. புனிதரின் மன்றாட்டுதவியை உறுதிப்படுத்துவதற்கு
   4. எமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு

38. ‘கிறிஸ்துவின் இரத்தம், வாழும் கடவுளுக்கு நாம் வழிபாடு செய்யுமாறு எம்மை தூய்மைப்படுத்துகின்றது.’ என்னும் இறைவார்த்தைப் பகுதி உள்ளது.
   1. எபிரேயர் 9ம் அதிகாரம்
   2. 1 கொரிந்தியர் 12ம் அதிகாரம்
   3. யோவான் 17ம் அதிகாரம்
   4. உரோமையர் 4ம் அதிகாரம்

39. திருப்பலி ஒப்புக்கொடுப்பதன் நோக்கமாக அமைவது
   1. இறைவனிடம் வேண்டுவதற்கு
   2. அயலவருக்கு உதவி செய்வதற்கு
   3. பக்திசபைகளை ஊக்குவிப்பதற்கு
   4. இறை ஆராதனை, நன்றிகூறல், புகழ்ச்சி, பாவப்பரிகாரம் என்பதற்காக

40. நாட்டு மக்கள் தொடர்பான அரச அதிகாரிகளின் பொறுப்புக்களில் சரியானது
   1. மக்களின் சுதந்திரத்தை மதித்தல்
   2. வரி வாங்குவதில் கருத்தாய் இருத்தல்
   3. ஊதியத்திற்கு அடிமையாகுதல்
   4. மக்களுக்கான சட்டங்களை அவமதித்தல்

(40x1=40 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2019

| தரம்:10 | கத்தோலிக்கத் திருமறை | நேரம்: 3.00 மணித்தியாலம் | | |
|---|---|---|---|---|
| சுட்டெண்:........................................................................................ | | 14 | T | II |

**கவனிக்க:**

I. முதலாம் வினா கட்டாயமானது, ஏனைய வினாக்களிலிருந்து நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

II. முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

## பகுதி – II

**சுருக்கமான விடைதருக.**

**01.**

1. தூய பவுல் திருமுகங்களை எழுதியதன் நோக்கங்கள் இரண்டு தருக?
2. வெளிப்பாட்டு இலக்கியத்தின் பண்புகள் இரண்டு குறிப்பிடுக?
3. ஞான இலக்கியத்தில் அடங்கும் நூல்கள் இரண்டு குறிப்பிடுக?
4. உயிர்த்த இயேசு சீடருக்கு காட்சி கொடுத்த சம்பவங்கள் இரண்டு தருக?
5. திருத்தொண்டராக நியமிப்பதற்குரிய பண்புகள் 2 குறிப்பிடுக?
6. பிற இனத்தவரின் திருத்தூதர் என அழைக்கப்படுபவர் யார்?
7. புனிதயோசவ்வாஸ் அடிகளாரின் புதுமைகள் இரண்டு குறிப்பிடுக?
8. நற்கருணையின் முன் அடையாளங்கள் இரண்டு தருக?
9. இஸ்ராயேலரின் பலிகளின் இரு பிரதான பிரிவுகளைக் கூறுக?
10. இறையன்புக்கு எதிரான பாவங்கள் இரண்டு தருக?

(10x2=20 புள்ளிகள்)

**02.**

1. தூய பேதுரு, இயேசுவின் மீது கொண்டிருந்த நம்பிக்கை அறிக்கையை எவ்வாறு வெளியிட்டார்?
2. இயேசு, பேதுருவிடம் ஒப்படைத்த பொறுப்புக்கள் எவை?
3. தூய பேதுருவின் முன்மாதிரிகையான வாழ்வைப் பின்பற்றி, நற்செய்திக்காக நீர் செய்யக்கூடிய செயல்கள் நான்கு தருக

(10 புள்ளிகள்)

**03.**

1. திருச்சபையின் பண்புகளை எழுதுக?
2. போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்னர் இலங்கையில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் எவை?
3. உமது பங்கின் வளர்ச்சிக்காக உம்மால் செய்யக்கூடிய பணிகள் எவை?

(10 புள்ளிகள்)

**04.**

1. யூத பாஸ்காவில் முக்கியம் பெறும் விடயங்கள் எவை?
2. கல்வாரிப் பலி உன்னத பலியாக விளங்கக் காரணங்கள் மூன்று எழுதுக?
3. பிறருக்காக உமது வாழ்வை அர்ப்பணமாக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் நான்கு தருக.

(10 புள்ளிகள்)

**05.**

1. இலங்கையில் மறைப் பாடசாலைகள் அமைக்க வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது?
2. இலங்கையில் உள்ள மறைமாவட்டங்கள் 6 எழுதுக?
3. மறைப்பாடசாலைக்கு செல்லாத உமது நண்பனுக்கு நீர் கூறக்கூடிய அறிவுரைகள் நான்கு தருக.

(10 புள்ளிகள்)

**06.**

1. முதலாம் கட்டளை எவற்றை அடிப்படையாகக் கொண்டது?
2. இரண்டாம் கட்டளைக்கு எதிரான பாவங்கள் மூன்று எழுதுக?
3. ஞாயிறு தினத்தை நீர் எவ்வாறு புனிதமாக அனுசரிப்பீர்?

(10 புள்ளிகள்)

**07.**

பின்வருவோரில் இருவரைப் பற்றி சிறுகுறிப்பு எழுதுக?

1. புனித அன்னை திரேசா
2. திருத்தந்தை பிரான்சிஸ்
3. அருட்பணி மைக்கல் றொட்றிக்கோ
4. அருட்பணி யாக்கோமே கொண்சால்வேஸ்
5. புனிதயோசேவ்வாஸ் அடிகளார்

(10 புள்ளிகள்)

## இரண்டாம் தவணைப் பரீட்சை 2019

## கத்தோலிக்க திருமறை தரம் - 10

## (புள்ளித்திட்டம்)

### பகுதி 1

| | | | |
|---|---|---|---|
| 1. 2 | 11. 1 | 21. 1 | 31. 2 |
| 2. 3 | 12. 2 | 22. 3 | 32. 2 |
| 3. 1 | 13. 3 | 23. 2 | 33. 3 |
| 4. 1 | 14. 1 | 24. 1 | 34. 3 |
| 5. 4 | 15. 2 | 25. 1 | 35. 2 |
| 6. 1 | 16. 3 | 26. 3 | 36. 4 |
| 7. 2 | 17. 2 | 27. 3 | 37. 3 |
| 8. 3 | 18. 4 | 28. 3 | 38. 1 |
| 9. 4 | 19. 4 | 29. 1 | 39. 4 |
| 10. 2 | 20. 4 | 30. 3 | 40. 1 |

(40x1=40 புள்ளிகள்)

### பகுதி 2

01.

1. 1. வேலைப்பளு காரணமாக சபைகளைத் தரிசிக்க முடியாமை
   2. சிறைப்பட்டிருந்தமை
2. 1. இரு தன்மைகள்
   2. இறுதிக்காலம்
   3. அடையாளங்களின் பயன்பாடு
   4. புனைபெயர்களை முன்வைத்தல்
3. யோபு, திருப்பாடல்கள், நீதிமொழிகள், சபை உரையாளர், இனிமைமிகு பாடல், சாலமோனின் ஞானம், சீராக்கின் ஞானம்
4. பாஸ்கா ஞாயிறு அன்று, எம்மாவு பயணத்தின்போது, உயிர்த்து 8 நாட்களுக்குப்பின், தோமா சீடர்களுடன் இருந்த போது
5. 1. நற்சான்று பெற்றிருத்தல்
   2. தூய ஆவி அருளும் வல்லமை பெற்றிருத்தல்
   3. ஞானம் நிறைந்தவர்களாய் இருத்தல்
6. புனித பவுல்
7. 1. மதங்கொண்ட யானையை அடக்குதல்.
   2. தெதுறு ஓயாவை கால்நடையாக நடந்து கடந்தார்.
   3. வறட்சியின் போது கண்டியில் மழைபொழியச் செய்தார்.
8. 1. மெல்கிசதேக் பலி
   2. மன்னா உணவு
   3. புளியாத அப்பத்தை உண்ணுதலும் கிண்ணத்தில் அருந்துதலும்
   4. அப்பங்களை பலுகச்செய்த அருங்குறி
   5.வாழ்வளிக்கும் உணவு பற்றி கற்பித்தல்
9. எரிபலி, தானியப்பலி
10. 1. இறையன்பைப் பற்றி சிந்திக்க மறுப்பது
    2. இறையன்புக்கு பிரதியன்பு செய்யாதிருப்பது
    3. நற்செயல்களைப் புரிவோருக்கு தடையாக இருப்பது

4. அகங்காரத்தினால் இறைவனை மறுப்பது

(10x2=20 புள்ளிகள்)

## 02.

1. “நீர் மெசியா வாழும் கடவுளின் மகன்”
2. 1. என் ஆட்டுக்குட்டிகளை பேணி வளர்
   2. என் ஆடுகளை மேய்
   3. என் ஆடுகளைப் பேணிவளர்
3. பொருத்தமான விடை எழுதியிருப்பின் புள்ளி வழங்குக.

(10 புள்ளிகள்)

## 03.

1. ஏகம், பரிசுத்தம், கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம்
2. 1. கொஸ்மஸ் இன்டிகோ பிளாஸ்ரா அவர்கள் எழுதிய கிறிஸ்தவ சபைகளின் விபரணம்
   2. அநுராதபுர கற்சிலுவை
3. பொருத்தமான விடை எழுதியிருப்பின் புள்ளி வழங்குக.

(10 புள்ளிகள்)

## 04.

1. 1. பாஸ்கா செம்மறி
   2. புளியாத அப்பம்
   3. கசப்புக் கீரை
   4. திராட்சை இரசம்
2. 1. கிறிஸ்து சிலுவையில் பலியானமை
   2. அதுவே முழுமையான பலி
   3. அவர் பாஸ்கா செம்மறியாகி மனிதருக்கும் இறைவனுக்கும் இடையில் உறவை ஏற்படுத்தியமை
3. பொருத்தமான விடை எழுதியிருப்பின் புள்ளி வழங்குக.

(10 புள்ளிகள்)

## 05.

1. 1. பாடசாலைகள் அரசினால் சுவீகரிக்கப்பட்டமை
   2. சமயம் கற்பித்தல் வாரத்திற்கு இரு பாடவேளை என மட்டுப்படுத்தப்பட்டமை.
2. கொழும்பு, குருநாகல், காலி, யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, சிலாபம், பதுளை, அநுராதபுரம், இரத்தினபுரி
3. பொருத்தமான விடை எழுதியிருப்பின் புள்ளி வழங்குக.

(10 புள்ளிகள்)